பேராதனை பல்கலைக்கழகம் - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மறறும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைகழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு	நிதி அமைச்சரினதும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினதும் முன் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,184,708,986 ஆன மிகை நிதி முதலீடு செய்யப் பட்டிருந்தது.	நிதி அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்று கொள்வதற்கு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் அத்தியவசிய கடிதங்கள் கல்வி அமைச்சின் செயலாளரால் பொது திறைசேரியின் பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் நடவடிககை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	1978 இன் 16 ஆம் பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் VII ஆம் பகுதியின் 45(2) XV ஆம் பிரிவு	தேசிய ஆராய்ச்சி மன்றத்திலிருந்து 2015 ஆண்டிற்கான திட்டத்திற்கு கிடைத்திருந்த ரூபா 15,169,843 ஆன ஆராய்ச்சி மானியத்திற்காக நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் உப வேந்தரால்	விற்பனை வருமானத் திலிருந்து பல்கலைக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய இறை பெறுமதியை, பேராசிரியரின் சேமலாப நிதியிலிருந்து அறவிடுவதற்கு	விரைவில் அறவிதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்..

		உடன்படிக்கைக்கு வராமல் பேராசிரியர் ஒருவரால் ஒப்பந்தம் கையெழுத்திட்டு. அம்மானியம் தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த ஆராய்ச்சி மூலம் 2020 ஜனவரி 01 முதல் 2023 ஜுன் 02 வரையிலான காலம் வரையில் தயாரிக்கப்பட்ட புற்றுநோய் கெப்சியல் விற்பனை செய்ததன் மூலம் பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 351,316 ஆன பங்களிப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும். என்பதாக	
(இ)	பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் I ஆம் பகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தி மற்றும் 4.1.1 ஆம் பந்தி	விரிவுரையாளர் ஒருவர் தனது பதவி விலகலை நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையின் கீழ் 03 மாதங்களுக்கு முன்பே ஆளுகை குழுவிற்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்க வேண்டிய போதிலும் அவர் 03 மாதங்களுக்கு முன்பே அறிவிக்கவில்லை என்றால், 03 மாத சம்பளத்தை பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டும் என்றும் குறிப்பட்டிருந்த போதிலும், 40 விரிவுரையாளர்கள் தங்கள் பதவி விலகலை சமர்ப்பித்த நாளிலிருந்து பணிக்கு வராமல் இருந்த போதும் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,212,748 தொகையான 03 மாத சம்பளத்தை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்பருக்க வில்லை.	தாபன விதிக் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் xix ஆம் அத்தியா யத்தின் 5 ஆம் பந்தி	தாபன விதிக் கோவையின் நியதியிருந்து விலகி பல்கலைக்கழக ஆளுகை சபை தீர்மானிக்கப்பட்ட வாடகை தொகையை அறவிட்டமை காரணமாக 2024 ஜனவரி முதல் செப்டம்பர் வரையான காலப்பகுதிக்காக கல்வி மற்றும் கல்வி சாரா	2024 ஒக்டோபர் 1ஆந் திகதி முதல் திருத்தப் பட்ட உத்தியோகபூர்வ வீட்டு வாடகையை அறவிடுவதற்கு நிதியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக.	தாபன விதிக் கோவையின் நியதிகளின் பிரகாரம் பிரகாரம் நடவடிககை எடுக்கப்பட வேண்டும்.

		பதவியணியின் 324 பேரிடமிருந்து மொத்தம் ரூபா 19,680,784 ஆன வாடகைக்கு குறைத்து அறவிடப்பட்டிருந்தது.		
(உ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2)(3)	நிர்மாண செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 09 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 33,429,836 ஆன நிறுத்தி வைத்த உழைப்புகள் மற்றும் ரூபா 3,531,810 ஆன திருப்பி செலுத்த வேண்டிய வைப்புகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	02 திட்டங்களுக்கு ரூபா. 3,498,874 தொகை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் பொறியாளரின் பரிந்துரை மற்றும் ஒப்பந்ததாரரின் கோரிக்கையின் அடிப்படையில் பணம் விடுவிக்கப்பட்டதால், மேலும் வைப்புத்தொகை கோரிக்கைகள் எதுவும் செய்யப்படாததால், நிதிக் குழுவின் அங்கீகாரத் துடன் அது வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.	குறித்த பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவு	வாகன கைதவிர்ப்பு செயற்பாடுகள் மூலம் கிடைத்த ரூபா 3,304,899 ஆன வருமானம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்காமல் பல்கலைக்கழகத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.	1978 இன் 16 ஆம் பல்கலைக்கழக சட்டத்தின் XIII பகுதியின் 99((1) (ஈ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதாக	சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க சுயநிதியிடல் உழைப்பு தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தி	2016 முதல் 2024 யூலை வரையான செயற்பாட்டில் காணப்பட்ட ரூபா 456,251,500 ஆன மொத்த வருமானமொன்றுடன் கூடிய 40 சுயநிதியிடல் உழைப்பு சுயநிதியிடல் உழைப்புகளிலிருந்து விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகூடம் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழகத்திற்கு எந்தவொரு பங்களிப் பொன்றையும் வழங்காமல் பல்கலைக்கழக நிதியக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.	இந்த நிலைமை 04/2016 சுற்றறிக்கையின் பரிந்துரைகளால் ஏற்பட்டுள்ளதுடன் இந்த சுற்றறிக்கையை திருத்துவதற்கான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றதாக .	- மேற்படி –
(ஏ)	2017 யூலை 10 ஆந் திகதிய	பல்கலைக்கழக பதவியணியினரின் நிரந்தர	கல்வி பதவியணியினர்களின்	சுற்றறிக்கை ஏற்பாடுகளின்

	10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன சுற்றறிக்கை	மற்றும் பயிலுனர் விரிவுரையாபளர்களின் வருகை மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது முறையே சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 3,385,317,098 தொகையும் ரூபா 3,711,517,359 என கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.	வருகை மற்றும் வெளியேறலை சரிபார்க்க கைவிரலடையால இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை, மேலும் தற்காலிக விரிவுரையாளர்கள் தங்கள் வருகை மற்றும் வெளியேறலை ஒரு புத்தகத்தில் பதிவு செய்வதுடன், துறைத் தலைவரால் சான்றளிக்கப் பட்டதன் பின்னரே சம்பளம் வழங்கப்படுகின்றதாக.	பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். .
(ஐ)	2018 நவம்பர் 26 ஆம் திகதிய 15/2018 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை	பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொது திறைசேரியினதும் அங்கீகாரமொன்று இல்லாமல் 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 71,061,240 தொகை ஊழியர் அக்ரஹார காப்புறுதி பங்களிப்பாக தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது	15/2018 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததாக.	பொது முயற்சிகள் திணைக்களத்தின தும் பொது திறைசேரியினதும் அங்கீகாரத்தைப் பெற்றக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஓ)	2015 மே 07 ஆந் திகதிய UGC/AC/ QA/Gen ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கல்விசார் பதவியணிக்காக ஒழுக்க மற்றும் கல்வி கணக்களிதன்மை வழிகாட்டி	ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒரு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 300 மணிநேரங்களை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக (Student Contact Hours) மீதமுள்ள 1100 மணித்தியாலங்களை ஆராய்ச்சி, பல்கலைக்கழகம் மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளுக்கும், 12 வார கால எல்லை பரீட்சைப் பணிகள் மற்றும் வினாத்தாள்களைத் பரீட்சிப்பதற்கும் ஒதுக்க வேண்டிய போதும் பேராசரியரால் 2023 சனவரி 01 ஆந் திகதி முதல் 2024 யூன் 30 ஆந் திகதி வரை கல்விக் காலத்தில் 10 மணிநேரம் மாத்திரமே	பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை.	வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

விரிவுரைகளை நடாத்தியிருந்தார்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதி விளைவுகள் ரூபா 587,618,865 ஆன பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 177,927,611 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 409,691,254 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிற்கு சம்பளம் மற்றும் படிகள், பராமரிப்பு செலவினம் கல்வி நடவடிக்கைகளுக்காக நிதி ஒத்துழைப்பு செலவினம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 முதல் 2024 காலப்பகுதி வரையான காலப்பகுதியில் கல்வி விரிவாக்க மற்றும் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் செயற்திட்டம் (AHEAD) மூலம் புலமைப்பரிசில் மானியம் பெற்றுக் கொண்டு வெளிநாடு சென்ற 07 விரிவுரையாளர்கள் உடன்படிக்கை மீறிய காரணத்தினால் ரூபா 53,414,966 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. கல்விசார் பதவியணியின் 68 பேர்களிடமிருந்து 11 ஆண்டு முதல் 42 ஆண்டு காலமாக பிணை முறி மீறியதால் அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 33,708,966 ஆன மீதியொன்று குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அறவிடுவதற்கு முயற்சி எடுக்காமையால் மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அந்த பிணையாளிகளிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களை கண்டுபிடிப்பதற்கு தவறியிருந்தது.	ஒப்பந்தத்தின்படி செலுத்த வேண்டிய பத்திரத் தொகையை உடனடியாக பல்கலைக் கழகத்திற்கு செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.-
(ஆ)	2018 ஆம் ஆண்டு முதல் 2024 வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்ய வேண்டிய பல்கலைக் கழகத்தின் 07 பீடங்களில் செயற்படுத்தப்பட்ட ரூபா 97,760,741 கூட்டுப் பெறுமதியான 46 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 86,049,868 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அந்த	ஆராய்ச்சிக்காக செலவிடப்படும் நிதியை தொடர்புபட்ட விரிவுரையாளர்களிடமிருந்து 2025 ஆகஸ்ட் 31 இற்குள் தவணைகளில் முழுமையாக அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்படும் என்பதாக	ஆராய்ச்சிப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்வதற்கு அல்லது அச்செயற் திட்டங்களின் காலத்தை நீடிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட 2024 மே 02 ஆம் திகதி முதல் 2024 ஜூலை 15 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் நிரந்தர பதவியணியின் 09 பேருக்காகவும் தற்காலிக கல்வி பதவியணி 21 ஊழியர்களுக்காக செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 3,436,320 ஆன சம்பள முற்பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. தொடர்புடைய	உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியை விடுவிக்கும் போது இந்தக் கடன் நிலுவைகளை அறவிடுதாக.	உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	2017 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்பட்ட முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அங்கீகரிக்கப்படாத 04 பதவிகளுக்காக 2014 முதல் 2024 வரை மொத்தம் ரூபா 3,222,972 படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது	மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது பல்கலைக்கழக ஆளுகைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு சதவீதங்களின்படி பணம் செலுத்தப்பட்டுள்ளதாக .	அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்பாளர் கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்,
(உ)	பல்கலைக்கழகத்தின் கழிவுநீர் முறைமையை கண்டி நகர கழிவுநீர் செயற்திட்டத்திற்கு தொடர்புபடுத்த பேராதனை பல்கலைக்கழகம் தேசிய நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை மற்றும் கண்டி மாநகர சபை என்பற்றிற்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளாமல் 2019 ஆம் ஆண்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு 2020 ஆம் ஆண்டின் 2 சந்தர்பங்களின் போது ரூபா 16,850,000 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2024 ஒக்டோபர் 28 ஆந் திகதி வரை பௌதீக செயன் முன்னேற்றம் 7.8 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 2021 டிசம்பர் 31 ஆந் திகதி அளவில்	அளவீடு செய்து கொடுப்பனவு அடிப்படையில் செலுத்த வேண்டியதுள்ளதால் செய்து பார்ப்பதற்கான உரிய கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதாக ˙,	வேலைகளப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்;.

	செயற் திட்டத்தின் வேலை நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.		
(உ)	பல்கலைக்கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் மின்சாரம் மற்றும் நீர் பட்டியல்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 2,418,820 ஆன பணத்தை செலுத்துவதற்கு நேர்ந்திருந்ததுடன் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பட்டியல்களுக்கு தாமதக் கட்டணம் வசூலிக்கப்படாத வகையில் இ பணம் செலுத்துவதை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.2 நிதியப் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	(APP) செயற்திட்டம் 2015 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2016 ஜூலை 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்காக கிடைத்திருந்த ரூபா 1,466,529 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 08 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்த முடியாமல் காணப்பட்டன.	ஆராய்ச்சியை வழங்கிய ஜப்பானின் APN நிறுவனத்திற்கு தொடர்புடைய நிதியை அனுப்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்,	மேலும் நிதியத்தை உரிய முறையில் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	05 ஆராய்ச்சி நிதியங்களுக்குரிய வெவ்வேறு 06 வெவ்வேறு நிதியங்கள் மற்றும் ஏனைய 08 நிதியங்களுக்குரிய ரூபா 7,309,383 தொகை ரூபா 4,357,557 தொகை ரூபா 7,699,757 தொகை என்பன ஓரண்டிற்கு மேற்பட்ட காலமாக குறை பயன்பாட்டில் காணப்பட்டன.	இந்த நிதியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு செலவிடுவதற்கும் பல்கலைக்கழக நிதியம் மற்றும் பீட அபிவிருத்தி நிதிக்கும் மாற்றப்பட உள்ளதாக.	நிதியை முறையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகள் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பல்கலைக்கழகத்தின் கழிவுநீர் முறைமையை கண்டி நகர கழிவுநீர் செயற்திட்டத்திற்கு தொடர்புபடுத்த பேராதனை பல்கலைக்கழகம் தேசிய நீர்	அளவீடு செய்து கொடுப்பனவு அடிப்படையில் செலுத்த வேண்டியதுள்ளதால் செய்து பார்ப்பதற்கான உரிய கொடுப்பனவுகள்	வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.,

வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை மற்றும் கண்டி மாநகர சபை என்பற்றிற்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு 2019 யூலை 08 ஆந் திகதி அதன் வரைவு பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2024 ஒக்டோபர் 28 ஆந் திகதி வரை 05 ஆண்டுகள் கடந்திருந்த போதும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றுக்கு வராமல் தேசிய நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு 2020 ஆம் ஆண்டின் 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 16,850,000 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் கணக்காய்வு திகதியான 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்தின் வேலைகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்ததுடன் 2024 ஒக்தோபர் 28 ஆந் திகதி வரை பௌதீக செயன் முன்னேற்றம் 7.8 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	செய்யப்பட்டுள்ளதாக.	

3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி துரிதப்படுத்தல் (AHEAD) திட்டத்தின் கீழ் Construction of proposed extension to the manufacturing and industrial Engineering building of the faculty of Engineering முன்மொழியப்பட்ட நீடிப்பு நிர்மாணத்தை முடிப்பதற்கான ரூபா 127.87 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு தனியார் கம்பனியொன்றுடன் 2021 பெப்ரவரி 16 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் படி இந்த திட்டம் 2022 ஆகஸ்ட் 15 ஆந் திகதி அளவில் முடிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31, வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 49 சதவீத பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டு ரூபா 91,051,620 செலுத்தப்பட்டிருந்தது.	ஒப்பந்தகாரரின் ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதுடன் செயலாற்றல் பிணை பத்திரத்தை பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, ஆனால் ஒப்பந்தகாரர் இதற்கு எதிராக தடை உத்தரவுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு எதிராக நடுவர் நடவடிக் எடுக்கப்பட்டுள்ளது. ஈடுபட்டுள்ளார். இந்த திட்டத்தின் எஞ்சிய பணிகளை முடிக்க அமைச்சரவை அங்கீகாரம் தற்போது பெறப்பட்டுள்ளதாக	செயலாற்றல் பிணைப் பத்திரத்தை பல்கலைக் கழகத்திற்கு மாற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் மேலும் பணிகளை உரிய காலத்திற்குள் பூர்த்தி செய்ய வேண்டும்.

	பல்கலைக்கழகத்தால் செயலாற்றல் பிணைப் பத்திரத்தை பணமாக்க முயன்ற போது ஒப்பந்ததாரர் எடுத்த சட்ட நடவடிக்கை எடுத்ததன் காரணமாக செயலாற்றல் பிணை முறியை பல்கலைக்கழகத்திற்கு கையேற்க முடியவில்லை.		
(ஆ)	மீவதுர விடுதி வளவில் சிற்றுண்டிச் சாலையொன்றை நிர்மாணிப்பதற்காக 2021 ஒக்தோபர் 01 ஆந் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுடன் ரூபா 36,805,177 ஆன உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த துடன் 2022 செப்தம்பர் 30 ஆந் திகதி அளவில் இந்நிர்மாணத்தை பூர்த்தி செய்து கையளிக்கப்பட வேண்டியிருந்த போதும் 2024 செப்தம்பர் 10 கணக்காய்வு திகதி வரையிலும் கட்டிடத்தின் அத்திவார நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் 2022 ஆகஸ்ட் 04 ஆம் திகதி அளவில் ஒப்பந்தக்காரரால் செயற்திட்டத்தின் வேலைகளை தற்காலிகமாக நிறுத்துவதாக பல்கலைக்கழகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்து வேலைத் தளத்திலிருந்து வெளியேறச் சென்றிருந்ததுடன் இச்செயற்திட்டம் 2023 ஜூன் 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இரண்டு தரப்பினரினதும் இணக்கத்தின் பேரில் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு 2024 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக பெறுகை குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் இச்செயற் திட்டத்திற்குரிய ரூபா 1,840,800 ஆன செயலாற்றல் பிணைப் பொறுப்பு 2024 ஜூலை 13 ஆம் திகதி முடிவடைவதற்கு முன்னர் பணமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை இச்செயற் திட்டத்தின் எஞ்சிய வேலைகளுக்காக உரிய பெறுகை நடவடிக்கைகள் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது	இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் பேரில் இந்த ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஒப்புக்கொண்டுள்ளனதுடன், செயற்திட்டத்தின் எஞ்சிய வேலை களுக்காக 2025 ஆம் ஆண்டிற்கான பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் பெறுகை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக	பெறுகை நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.